Action taken in
C.No. 5884/RND.A5/96

TAPPAL
8-NOV
13
MADRAS-600

RND A5

113

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

-----

கல்வி தகுதி - பொதுப் பணிகளில் நியமனம் செய்ய கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தால் (நிகர் பல்கலைக் கழகம்) வழங்கப்படும் முதுநிலை வணிக நிருவாக பட்டப்படிப்பை (M.B.A. ) அங்கீகாரம் செய்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்) துறை

அரசாணை நிலை எண். 258 நாள்: 27.10.1997

108631 படிக்கப்பட்டது:-

1. அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(ஆர்)துறை, நாள்.20.12.93.
2. கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவன பதிவாளரது கடித எண். AC/33, நாள்.6.7.96.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரது கடித எண்.5884/RND-A5 /96, நாள்.6.5.97.

-------

ஆணை:

அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தின் (நிகர் பல்கலைக் கழகம்), பதிவாளர், தங்கள் கல்வி நிலையத்தால் வழங்கப்படும் முதுநிலை வணிக நிருவாக பட்டப்படிப்பு பிற பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் முதுநிலை வணிக நிருவாக பட்டப் படிப்புக்கு சமமானதாகக் கருதி அங்கீகாரம் அளிக்குமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளரைக் கேட்டுள்ளார்.

2. மேற்சொன்ன பதிவாளரின் கோரிக்கை, 20.12.93 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(ஆர்) துறையின் அரசு ஆணை நிலை எண்.441-ல் ஆணையிட்டவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரைத் தலைமையாகக் கொண்டு இதற்கென அமைக்கப்பட்ட குழுவின் (————) முன்னர் பரிந்துரைக்காக வைக்கப்பட்டது.

3. 11.4.97 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு, அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் முதுநிலை வணிக நிருவாக பட்டப் படிப்பு (M.B.A. ) பிற பல்கலைக் கழகங்கள் மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி அவையால் ( All India Council for Technical Education ) அங்கீகரிக்கப்பட்ட தரமான கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் முதுநிலை வணிக நிருவாகப் பட்டப் படிப்புக்கு ( M.B.A. ) சமமானதாகக் கருதிப் பொதுப் பணிகளில் முதுநிலை வணிக நிருவாகப் பட்டம் கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பணியிடங்களில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் வழங்க அரசுக்கு இக்குழு பரிந்துரை செய்துள்ளது.

....2

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே கோயம்புத்தூரிலுள்ள அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தால் (நிகர் பல்கலைக் கழகம்) வழங்கப்படும் முதுநிலை வணிக நிருவாகப் பட்டப் படிப்பை (M.B.A.) பல்கலைக் கழகங்கள் மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி அவையால் ( All India Council for Technical Education ) அங்கீகரிக்கப்பட்ட தரமான கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் முதுநிலை வணிக நிருவாக பட்டப் படிப்புக்கு ( M.B.A. ) சமமானதாகக் கருதி பொதுப் பணிகளில் கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள முதுநிலை வணிக நிருவாகப் பட்டம், கல்வித் தகுதியாக அரசு பணியிடங்களுக்கு வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. [illegible]
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

அனைத்துச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9
அனைத்துத் துறைத்தலைமை அலுவலர்கள்.
பதிவாளர், அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனம் (நிகர் பல்கலைக் கழகம்), கோவை-641 043,
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

நகல்:

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9
அனைத்துப் பிரிவுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
உயர்கல்வித் துறை, சென்னை-9

/பணிந்தனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்